அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் மதச்சார்பற்ற தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். உடன் முன்னாள் நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம், செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார், நகரத் திமுக செயலாளர் ஏ.கே.மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி, நகர் மன்றத் துணைத் தலைவர் பழனிச்சாமி ஆகியோர் உடன் சென்றனர்.

நெல் கொள்முதலுக்கான ஊக்கத் தொகையை நிறுத்துமாறு ஒன்றிய அரசு – தமிழ்நாடு அரசுக்கு எழுதிய கடிதம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறிய குற்றச்சாட்டு நிரூபணம்!

ஆதாரத்துடன் வலைதளத்தில் பதிவிட்டார் முதல்வர்!

சென்னை, ஏப். 15 -

நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிறுத்து மாறு ஒன்றிய அரசு கடிதம் எழுதியிருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு வழங்கும் நெல் ஊக்கத்தொகையை நிறுத்தச் சொல்லி ஒன்றிய நிதி அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது. இது தமிழ்நாடு விவசாயிகளின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் செயல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குற்றம்சாட்டியிருந் தார்கள்.

நெல் சாகுபடி ஊக்கத்தொகை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் தவறானவை என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன் தெரிவித்தார். இதற்குப் பதிலடி கொடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை, அப்படிப் பேச வேண்டிய அவசிய மும் எனக்கு இல்லை" என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், ஒன்றிய நிதி அமைச்சகம், தமிழ்நாடு அரசின் தலைமைச் செய லாளருக்கு எழுதிய கடிதம் தற்போது வெளியாகி உள்ளது. அதில், நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிறுத்துமாறு தெளிவாகவே குறிப்பிடப் பட்டுள்ளது.

நெல் சாகுபடிக்கு தண்ணீர், உரம் போன்றவை அதிகம் தேவைப்படும் என்றும், இதனால், நிலத்தடி நீர்மட்டம், மண்வளம் பாதிக்கப்படும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிறுத்துமாறு ஒன்றிய அரசு கடிதம் எழுதி யிருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு நிரூபணமாகி உள்ளது.



वी. वुअलनाम आई.ए.एस.
सचिव (व्यय)
V. Vualnam I.A.S.
Secretary (Expenditure)

भारत सरकार
वित्त मंत्रालय
व्यय विभाग
Government of India
Ministry of Finance
Department of Expenditure

D.O.F.No. 38(01)/PFC-I/2025 09th January 2026

Dear Shri N. Muruganandam,

As you are aware, the Government of India announces the Minimum Support Price (MSP) for various crops every year to ensure remunerative prices for farmers and to prevent distress sales.

2. In recent years, bumper production of wheat and paddy has resulted in wheat and rice stocks far in excess of requirements for the Public Distribution System, buffer norms, and other welfare and contingency needs. The surplus continues to rise year after year, creating a significant and recurring burden on the public exchequer.

3. The announcement of additional bonus on paddy and wheat (over and above MSP) by some State Governments, including the Government of Tamil Nadu, will cause higher sowing and production of these foodgrains.

4. Wheat and paddy are comparatively water, fertilizer and input intensive crops and their disproportionate cultivation exacerbates groundwater depletion, soil degradation, biodiversity loss and stubble burning. These outcomes have serious implications for sustainability, climate resilience and public health. At the same time, inadequate domestic production of oilseeds and pulses compels higher imports.

5. In view of the above, I request you to review the existing bonus policy of the State Government and consider discontinuing the bonus on wheat and paddy. It is requested that attention be shifted towards incentives to promote pulses, oilseeds and millets, in line with national priorities for nutrition security, Atmanirbharta and sustainable agriculture.

With warm regards,

Yours sincerely,

(V. Vualnam)

Shri N. Muruganandam, IAS
Chief Secretary
Govt. of Tamil Nadu Secretariat,
Chennai – 600009

தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசின் கடிதம்!

மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களே,

தாங்கள் சொல்லியது உண்மையாக இருந்தால் கடிதத்தை வெளியிட்டிருந்தாலே போதும். மக்கள் படித்து உண்மையை அறிந்துகொண்டிருப்பார்கள். அதற்கு, இவ்வளவு நீளமான பொழிப்புரை எழுதி, கடிதத்தை வெளியிட்டதிலேயே தங்களின் குட்டு அம்பலமாகிவிட்டது.

மேலும், இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநில அரசுகளும், நெல்லுக்கு ஊக்கத் தொகை தரவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தாங்கள் தெரிவித்திருப்பதும் உண்மைக்குப் புறம்பானது.

கடந்த பிப்ரவரி மாதம், மாண்புமிகு கேரள முதலமைச்சர் தோழர் பினராயி விஜயன் அவர்கள் இது குறித்து வெளியிட்ட பதிவே இதற்குச் சாட்சி!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தி.மு.க. சார்பில் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியத்தில் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார் மக்கள் அமோகமாக வரவேற்றனர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஏ.பி.சதீஷ்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ் ஆர் எஸ் உமரிசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், மற்றும் கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திருச்சுழி தொகுதிக்கு உட்பட்ட நரிக்குடி ஒன்றிய கிராமங்களில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சியில் நரிக்குடிப் பகுதியில் உருவான நவீன ஆரம்ப சுகாதார நிலையங்கள், புனரமைக்கப்பட்ட கண்மாய்கள் மற்றும் தரமான தார்ச்சாலைகள் என அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளை மக்களிடம் எடுத்துக் கூறி வாக்குகளை சேகரித்தார்.

மதுரை மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

கழகத்தினர் - கூட்டணி கட்சியினர் - பொதுமக்கள் திரளாக பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி -கோ.தளபதி எம்.எல்.ஏ. - சேடபட்டி மு.மணிமாறன் வேண்டுகோள்!

மதுரை,ஏப்.15-

மதுரை மாவட்டம் திருமங்கலம், வண்டியூர், சோழவந்தான், கே.புதூர் ஆகிய இடங்களில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15 மற்றும் 16ஆம் தேதிகளில் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்ய உள்ளார், எனவே இந்நிகழ்வுகளில் கழகத்தினர், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்குமாறு வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ., தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர் அதன் விபரம் :-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற தமிழ்நாடு முழுவதும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொளுத்தும் வெயில் என்றும் பாராமல் உற்சாகமாக தேர்தல் பிரச்சாரம் செய்து வருகின்றார்

இந்நிலையில் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணி மாறனை ஆதரித்து உதயசூரியின் சின்னத்திற்கு 15.04.2026 புதன்கிழமை இரவு 9 மணி அளவில் திருமங்கலம் தேவர் திருமகனார் திருவுருவ சிலை அருகில் எழுச்சிமிகு உரையாற்றி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க உள்ளார்

அதை தொடர்ந்து 16.04.2026ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு சோழவந்தான் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏவை ஆதரித்து அலங்காநல்லூர் பேருந்து நிலையம் அருகில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கேட்டு தேர்தல் பிரச்சார எழுச்சி உரையாற்ற உள்ளார்

அதனை தொடர்ந்து மாலை 7மணிக்கு மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கும் வகையில் மதுரை கோ.புதூர் பேருந்து நிலையம் அருகில் எழுச்சி உரையாற்றி வாக்குகள் சேகரிக்க உள்ளார்

பின்னர் இரவு 8மணிக்கு மதுரை வடக்கு மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வண்டியூரில் கழக அரசின் சாதனைகள் பலவற்றை எடுத்துரைத்து மீண்டும் திராவிடமாடல் அரசு அமைந்து கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வராவதை உறுதிப்படுத்தும் வகையில் எழுச்சி உரையாற்றி கழகத்தின் வெல்லும் வேட்பாளர் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அமோக வெற்றி பெற வேண்டும், எதிர்த்து போட்டியிட்ட அனைவரும் டெபாசிட் இழக்க வேண்டும் என வலியுறுத்தி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க உள்ளார்

எனவே இந்நிகழ்ச்சிகளில் மதுரை வடக்கு, மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து தரப்பு பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

சட்டப்பேரவை பொதுத் தேர்தல் 2026 : தி.மு.க. தலைமையிலான

மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு!

சென்னை, ஏப்.15-

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளரும் தமிழ்நாடு கேபிள்டிவி ஆப்ரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவருமான தஞ்சை கோ.ஜீவா அவர்கள், 14.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அனைத்து தொகுதிகளிலும் தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் களப்பணியாற்றி அவர்களின் வெற்றிக்கு பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்.

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 136வது பிறந்த தினத்தை முன்னிட்டு கழக அலுவலகத்தில் அன்னாரது திருவுருவ படத்திற்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், பகுதி செயலாளர் சசிகுமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அண்ணாமலை உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.